**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 313/2021 |
| Name | : Jagadeeswaran |
| P.W. | : 4 |
| Father Name | : Ramasamy |
| Village | : Narasingapuram |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2025

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது நரசிங்காபுரத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் வேலை செய்து வருகிறேன். கடந்த 14.04.2021 ம் தேதி நரசிங்காபுரத்தில் இருந்து கருப்புச்சாமி புதுருக்கு செல்லும் பாதையில் ஒரு பாறைக்குழி உள்ளது அதில் மருத்துவ கழிவை கொட்டியிருந்தார்கள். அது சம்மந்தமாக பொது மக்கள் டிப்பர் லாரி மற்றும் ஓட்டுநரை பிடித்து வைத்திருப்பதாக சொன்னார்கள். அது சம்மந்தமாக 15.04.2021 ம் தேதி அதிகாலை சுமார் 01.30 மணி அளவில் போலீசார் என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரை வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக நானும், என்னுடன் முத்துச்சாமியும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னிட்டு அன்றே அதிகாலை 04.45 மணியளவில் டிப்பர் லாரி மருத்துவ கழிவுகளுடன் கூடிய லாரியை போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள். அதில் நானும், முத்துச்சாமியும் சாட்சியாக கையொப்பம் செய்தோம்.

என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் எத்தனை மணிக்கு காவல் நிலையம் வந்தேன் என்றால் நான் காவல் நிலையத்திற்கு செல்லவேயில்லை. பிடிபட்ட வண்டி என்ன வண்டி என்றால் Ashok ley land வண்டி ஆகும். குறிப்பாக என்ன மாடல் வண்டி என்றால் டிப்பர் வண்டி ஆகும். ஆனால் அது என்ன குறிப்பிட்ட மாடல் என்ற விவரம் எனக்கு தெரியாது. வண்டியின் முன்பு என்ன பெயர் குறிப்பிட்டு எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மற்றவர்கள் கூறித்தான் இந்த வழக்கை பற்றிய விவரம் எனக்கு தெரியும் என்றால் குப்பை கொட்டி விவரம் கேள்விப்பட்டு சென்றேன். கைப்பற்றுதல் மகஜரில் கூறப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நரசிங்காபுரத்தை ஒட்டி பாறைக்குழி பக்கம் நரசிங்காபுரத்தில் இருந்து கருப்புச்சாமி புதுருக்கு செல்லும் பாதையில் எனது வீடு உள்ளது, மேலும் ஏ.டி.எஸ்.பி ரங்கசாமி பூமியும் அருகில் உள்ளது. தங்கவேல் வீடும் அருகில் உள்ளது. துரைசாமி கவுண்டரின் ஆட்டுத் தொட்டியும் உள்ளது. ஐயப்பா கல் கிரஷர் உள்ளது. மேற்படி கிரஷரின் தென்மேற்கு பகுதியில் இந்த வழக்குச் சம்பவம் நடந்ததாக எழுதப்பட்டிருந்தது. கழிவு கொட்டப்பட்டது அரசு புறம்போக்கு பாறையில் ஆகும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நான் சொன்னபடி எந்த வித ஆவணமும் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு அடிக்கடி சென்று வருவேன் என்றாலும், நான் காவல் துறையினரின் இருப்பு சாட்சி என்றாலும் சரியல்ல. நான் கூறியது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் கூறியது போல கேள்விப்பட்டு எங்கும் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.02.06 17:04:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்